**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 22.11.2022**
**----------------------------------------**

## <u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>

**<u>கூட்டம் எண். 9</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் கார்த்திகை 9 ஆம் நாள் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 25.11.2022ம் தேதியன்று வெள்ளிக்கிழமை மதியம் 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**<u>பொருள் எண்.1</u>**

சாத்தூ நகராட்சிக்கு சொந்தமான மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் பழுதடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி செய்ய தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு தொகை ரூ 5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 826/2022/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.128, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.2</u>**

சாத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் 12” பைப் பிளேட் பொருத்தும் பணிசெய்ய 14.10.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், சாத்தூர் - ரூ. 47,600
2. மகேஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் சாத்தூர் - ரூ. 50,200

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.102 நாள் 30.09.2022-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கெங்கா எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், சாத்தூர் அவர்கள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 728/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.129, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான இருக்கண்குடியிலிருந்து பம்பிங் லையன் 2 இடங்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் சரிவர கிடைக்கப் பெறவில்லை. அதற்கு தேவையான DI பைப்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

உத்தேச செலவு தொகை ரூ. 30,000/-க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 799/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.130, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN67BE 5382 வண்டிக்கு தகுதி சான்று 02.12.2022-ல் முடிவு பெறுவதால் தகுதி சான்று பெரும் பொருட்டு கீழ்க்கண்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.38,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. ஆயில் கியர் ஆயில் மாற்ற வேண்டும்
2. ஜெட்ராய்டு மிசின் ஆயில் மாற்றவும், ஜெட்ராய்டு மிசின் சைலன்சர் வெல்டிங் செய்ய வேண்டும்
3. 4 வீல் கிரிஸ் பேக்கிங் பிரேக் சரி செய்ய வேண்டும்
4. வாகனம் வெளிபுறம் உள்புறம் பெயின்ட் செய்ய வேண்டும்
5. அரசு பிறப்பிக்கப்பட்ட எழுத்துக்கள் எழுதவும் சிக்கர் ஒட்டவும் வேண்டும்.
6. வாகனம் வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 795/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.131, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

சாத்தூர் நகராட்சிக்கு 2022-2023-ம் ஆண்டிற்கு 15-வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.42.75 இலட்சத்திற்கு நகர்பகுதியில் புதியதாக தெருவிளக்குகள் 270 எண்ணம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி அளித்து அதற்கு நிதி ஒதுக்கீடாக அரசு மானியமாக ரூ.34.00 இலட்சமும், ரூ.8.75 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18277/2022/CFC, நாள்:14.10.2022-ல் சுட்டி காட்டப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 431/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.132, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6</u>**

சாத்தூர் நகராட்சிக்கு 2022-2023ம் ஆண்டுக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பகுதியில் உள்ள பூங்காவினை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.47.00 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Name of Work | Estimate Amount (Rs.In Lakhs) |
|---|---|---|
| 1 | Improvement of Park in Old Trunk Road (Back Side to railway station) Block No.3 Survey No.14 at Sattur Municipality | Rs.25.00 |
| 2 | Improvement of Park in LIC Street Block No.3 Survey No.32 at Sattur Municipality | Rs.22.00 |
| | **Total** | **Rs.47.00** |

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட பூங்காவினை மேம்படுத்தும் பணிக்கு ரூ.47.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியினை பெறுவதற்கு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமர்ப்பிக்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.814/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.133, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

சாத்தூர் நகராட்சிக்கு 2020-2021-ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மதுரை - கன்னியாகுமரி சாலையில் 15 எண்ணம் LED விளக்குகள் அமைப்பதற்கான பணி மேற்கொள்ளுவதற்கு 18.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s Sri Ganga Electricals, Tirunelveli - மதிப்பீட்டை விட 0.45 சதவீதம் குறைவு
2. M/s Kumar Agencies, Tirunelveli, - மதிப்பீட்டை விட 0.01 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s.Sri Ganga Electricals, Tirunelveli ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 344/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.134, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

சாத்தூர் நகராட்சி பொது பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 67BP 1251 வண்டி காலமுறை பராமரிப்பு பணிகளை செய்யவதற்கு மகேந்திரா & மகேந்திரா டீலர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஆகும் தொகைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்
2. ஆயில் சர்வீஸ்,ஆயில் பில்டர், டீசல் பில்டர்கள் புதியது மாட்ட வேண்டும்
3. கியர் பாக்ஸ், கிராஸ் கிளைச் மற்றும் டெப் ஆயில் செக்கப் செய்து ஊற்ற வேண்டும்
4. சீட் கலர்கள் அனைத்தும் புதியது, ஹொரட் ரெஸ்ட்டு 4 எண்ணம் புதியது போட வேண்டும்
5. புலோர் மேட்டு புதியது போட்டு கட்டு மேட்டு 5 எண்ணம் புதியது போட வேண்டும்.
6. முன்பகுதி, பின்பகுதி பம்பர் பேக் டாப், சயிடு சன்சயிடுகள், குரோமியம் கலர்கள் புதியது மாட்ட வேண்டும்.
7. ஆரன் 4எண்ணம் புதியது, பார்க் பைட் முன்பகுதி புதியது மாட்ட வேண்டும்.
8. முன்பகுதி 2 பாசிகள் மாட்ட வேண்டும்.
9. BOLERO ZEEP வாகனத்திற்கான 10000 கிலோ மீட்டர்க்கான அனைத்து செக்கப் செய்ய வேண்டும்

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 841/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.135, நாள்: 25.11.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் பழுதடைந்துள்ளது. அதனை பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 14.10.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.ஆர். முத்துசாமி - மதிப்பீட்டை விட 0.11 சதவீதம் குறைவு
2. திரு.எம்.குருசாமி, - மதிப்பீட்டை விட 0.16 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ஆர்.முத்துசாமி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 826/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.136, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN67BK 1057 வண்டிக்கு புதியதாக பேட்டரி சப்ளை செய்ய 13.09.2022-ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், சாத்தூர் - ரூ. 13,200
2. சாந்தா ஸ்பேர் சர்வீஸ் சாத்தூர் - ரூ. 14,100

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 78 நாள். 25.08.2022-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் நியூ ஜார்ஜ் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், சாத்தூர் அவர்கள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 602/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.137, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.05/158/2022 K.சுந்தரபாண்டியன் வகையறா வழக்கிற்கு எதிராக இந்நகராட்சி சார்பாக வழக்கினை எடுத்து நடத்துவதற்கு வழக்கு தொகையாக ஆகும் செலவுத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.800/2022/எப்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.138, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் பணிபுரியும் அம்மா உணவகம், DBC பணியாளர்கள் மற்றும் தட்டச்சு ஒப்பந்த ஊழியர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட EPF தொகைக்கான Interest 01.07.2019 முதல் 29.02.2020 வரை ரூ.214824/--னை கேட்பு வரைவோலையாக வழங்க Regional Employee's Provident Fund Organization அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பட்டது. அன்றைய தினமே EPF Officer இந்நகராட்சி ஆணையர் வங்கி கணக்கிலிருந்து மேற்படி தொகையினை மத்திய அரசு EPF சட்டத்தின்படி நோட்டிஸ்சுடன் வங்கி மேலாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தி மேற்படி தொகையினை பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது வங்கி மேலாளர் ஆணையரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரத்தை எடுத்துரைத்தார். அதன்படி தமது Tribunal வழக்கறிஞரிடம் தொடர்பு கொண்டு பேசிய போது மேற்படி தொகை செலுத்த வேண்டி அறிவுரை தெவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

நகராட்சியின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி Interest தொகை ரூ.214824/-னை அவசர அவசியம் கருதி கேட்பு வரைவோலை எடுக்கப்பட்டு EPF ஆய்வாளரிடம் வழங்கியதை மன்றத்தின் முன்அனுமதியினை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.320/2013/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.139, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

சார் பதிவாளர் சாத்தூர் அவர்களின் ந.க.எண்.367/2022, நாள்:28.10.2022-ம் தேதிய கடிதத்தில் சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய அலுலவக கட்டிடத்தினை சார் பதிவாளர் அலுவலகமாக இயங்குவதற்கு மாதந்திர வாடகை அடிப்படையில் வழங்கக்கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகராட்சி நிர்வாகத்தினால் நிர்ணயம் செய்யப்படும் மாத வாடகையின் அடிப்படையில் வாடகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட அலுவலக கட்டிடத்தில் தேவையான அடிப்படை வசதிகளை வாடகைக்கு விடப்படும் நாள் முதலும் மின் பயன்பாட்டிற்கான மின் கட்டணத்தினை ஆணையர் பெயரில் நிலுவையின்றி செலுத்தப்பட வேண்டும்.
3. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகையிலிருந்து உயர்வு செய்யப்படும். அதற்கு எவ்விதமான ஆட்சேபனையின்றியும் அரசினால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

   (ந.க.எண். 804/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.140, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டாடா ஏஸ் TN67 BJ8661க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | சித்திக் ஆட்டோமொபைல்ஸ் ஒர்க்ஸ் & சர்வீஸ் லூப்ரிகேசன், கோவில்பட்டி | ரூ.20950 |
| 2 | என்.ஏ.ரகுமத்துல்லா ஆட்டோமொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி | ரூ.19208 |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலில் என்.ஏ.ரகுமத்துல்லா ஆட்டோமொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. பொது சுகாதாரப்பிரிவு டாடா ஏசி TN67 BJ8661க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்ய உத்தேச செலவுத்தொகை ரூ.19500/-க்கும் அதற்கான விலைப்புள்ளி கோரவும் பொதுசுகாதார அவசரஅவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள என்.ஏ.ரகுமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 828/2022/H1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண்.141, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.15</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான கனரக வாகனம் (HCV) TN67 AH6760 டம்பர் பிளேசர் வாகனம் டிப்பர் ஆக மாற்றம் செய்யப்பட்டு தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி டிப்பர் லாரியில் பின்புறமுள்ள நான்கு டயர்களும் தேய்மானம் அடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. தற்போது வாகனத்தில் உள்ள டயர்கள் வாகனம் புதிதாக வாங்கும் போது வாகனத்திலே பொருத்தப்பட்ட டயர்களாகும். இது நாள் வரைக்கும் ஓடிய கிலோ மீட்டர் 69145. ஆகவே மேற்படி டிப்பர் லாரியில் பின்புறம் தேய்மானம் அடைந்து மோசமான நிலையில் உள்ள நான்கு பழைய டயர்களை அகற்றிவிட்டு புதிய நான்கு டயர்கள் மற்றும் டியூப்புகள் பொருத்துவதற்கும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.46000/-க்கும். உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்:831/2022/H1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண்.142, நாள்: 25.11.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.16</u>**

நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டாடா ஏஸ் TN67 BJ 8661க்கு நான்கு டயர்கள் வாங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | Sri Guru tyres, sattur | ரூ.15600 |
| 2 | Ganesh tyres, sattur | ரூ.15800 |
| 3 | Sri perumal samy tyres, sattur | ரூ.16000 |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலில் Sri guru tyres நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. பொது சுகாதாரப்பிரிவு டாடா ஏசி TN67 BJ 8661க்கு புதிய டயர்கள் வாங்குவதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.15800/-க்கும் அதற்கான விலைப்புள்ளி கோரவும் பொதுசுகாதார அவசரஅவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Sri guru tyres, sattur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 801/2022/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.143, நாள்: 31.10.2022**

**தீர்மானம்: அலுவலக குறிப்பிற்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**